தமிழ்நாட்டில்

# ‘மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைப்பு’ எனும் அரசின் அறிவிப்பு என்ன ஆனது?

## சட்டப்பேரவையில் – எ.வ.வேலு கேள்வி!



சென்னை, ஆக. 13-

தமிழ்நாட்டில் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது எனும் அரசின் அறிவிப்பு குறித்து, சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு கேள்வி எழுப்பினார்.

சட்டப்பேரவையில் அவர் குறிப்பிட்டதாவது:

இந்த அரசு என்பது மது கொள்கைக்கு எதிரான அரசு என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் பேரவைத் தலைவர் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த 5 ஆண்டு காலங்களிலே நீங்கள் ஆண்டுக்காண்டு மதுக் கடைகளைக் குறைக்கப் போகிறீர்களா? அதை வெளிப்படையாக உங்களுடைய மானியக் கோரிக்கையில் இந்தந்த ஆண்டில், இந்தந்தக் கடைகளை நாங்கள் குறைபோம் என்று நீங்கள் அறிவிக்கப்போகிறீர்களா? நான் கேட்பதற்குக் காரணம் என்னவென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும், இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுவாக, இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றெல்லாம் கிடையாது, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால், 717 கடைகளை ஏற்கெனவே குறைத்து விட்டோம் என்ற அறிவிப்பு இருக்கிறது. அது எந்தெந்த மாவட்டத்தில், எந்தக் கடையைக் குறைத்தார்கள் என்று அந்த மாவட்டத்தில் இருக்கிற யாருக்கும் தெரியவில்லை. நீங்கள் சொல்கிறீர்கள் number வரும், நாங்கள் online மூலமாக செய்திருக்கிறோம் என்கிற நிலைமையல்ல. Localலில் இருக்கிற எந்தப் பத்திரிகையிலும் இந்தக் கடைகளையெல்லாம் குறைத்து விட்டோம் என்ற அறிவிப்பு இல்லை. அதுவும் தேவை. நீங்கள் சொல்வதைப் போல ஆண்டாண்டுக்கு நாங்கள் குறைக்கப்போகிறோம் என்பதை நீங்கள் இப்போது சொன்னாலும் சரி அல்லது உங்களுடைய மானியக் கோரிக்கையில் ஒரு வருடத்திற்கு இத்தனை கடைகளை நாங்கள் குறைக்கப்போகிறோம் என்று சொன்னாலும் சரி. இந்த அரசு அதற்கான முயற்சியை எடுக்கிறது என்று நாங்கள் எடுத்துக்கொள்ள முடியும். (குறுக்கீடுகள்)

இவ்வாறு - பேரவையில் எ.வ.வேலு எம்.எல்.ஏ. அவர்கள் குறிப்பிட்டார்.



பாசறை முரசு வாசகர் வட்டம் சார்பில் பாசறை மு.பாலன் எழுதிய ‘சனநாயகமும் – சமத்துவமும்’ நூல் வெளியீட்டு விழா சென்னை பெரம்பூரில் நடைபெற்றது.மல்லை சி.ஏ.சத்யா நூலை வெளியிட முதல் பிரிதியை கழகத்தின் செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் பெற்றுக் கொண்டார். இதில் முனைவர் மோ.பாட்டழகன், வழக்கறிஞர் குமார தேவன், மயிலை பாலு ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி ஏரியூர் ம.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் முத்தையா தனது ஆதரவாளர்களுடன் அக்கட்சியிலிருந்து விலகி முன்னாள் அமைச்சர் – சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார். உடன் புலவர் சே.செவந்தியப்பன், சிங்கம்புணரி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் எஸ்.முத்துகுமார், முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஏ.எல்.சந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க.வுக்கு எதிரான மனு தள்ளுபடி!

# கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்!

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஆக.13-

கோவில் நிதியில் கல்லூரி துவங்க முந்தைய தி.மு.க. அரசின் உத்தரவை எதிர்த்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. கோவில் நிதியை கல்விக்கு பயன்படுத்தலாம் என நீதிமன்றம் தீர்ப்பளித் தது.

கோவில் நிதியில் கல்லூரி துவங்க முந்தைய தி.மு.க. ஆட்சியில் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் சார்பில் சென்னை கொளத்தூரிலும், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில் நிதியில் திருச்செங்கோட்டி லும், பழனி தண்டாயுதபாணி கோவில் நிதியில் ஒட்டன்சத்திரத்திலும், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சார்பில் விளாத்திகுளத்திலும் என, நான்கு இடங்களில் கல்லூரிகள் துவங்க அனுமதி அளித்து தமிழக உயர் கல்வித்துறை செயலாளர் கடந்த அக்டோபர் 6ஆம் தேதி அரசாணை பிறப்பித் தார்.

இந்த அரசாணைக்கு தடை விதிக்கக் கோரியும், அதை ரத்து செய்யக் கோரியும் சென்னையைச் சேர்ந்த டி.ஆர்.ரமேஷ் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன் மற்றும் இ. மனோகரன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, அறநிலையத்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், கபாலீஸ்வரர் கோவில் நிதியை பயன்படுத்தி கொளத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரத்தில் கல்லூரிகள் அமைக்கப்பட்டு மூன்று பேட்ச் மாணவர்கள் படிப்பை முடித்து விட்டதாகவும், திருச்செங் கோடு மற்றும் விளாத்தி குளத்தில் கல்லூரிகள் இன்னும் அமைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

என்.கௌதமன் தலைமை! நாகையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம்!

## வழக்கறிஞர் மதுரை க.அழகுசுந்தரம் சிறப்புரை! மு.லோகநாதன், நாகை நாகராஜன், மு.க.ஜீவா பங்கேற்பு!

நாகை, ஆக. 13-

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம் நாகையில் நாகை நகர தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை தாங்கினார்.

மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை கழக பேச்சாளரும் முத்தமிழ்பேரவை செயலாளர் நாகை நாகராஜன் வரவேற்றார். கூட்டத்தில் வழக்கறிஞர் மதுரை க. அழகுசுந்தரம் மற்றும் இளம் பேச்சாளர்கள் நாகை என். அருள்அமுகன், ப.அருண்குமார், பிரீத்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்..பால்ராஜ், பெ.முருகானந்தம், மாவட்ட சார்பணிகளின் துணை அமைப்பாளர்கள் அங்காடி சேகர், விமல் மொக்கை, ஆர்.கே.பிரதீப், அய்யாவு கணேசன், கலையரசன், நாகை நகர துணை செயலாளர்கள் வெற்றிலை கடை எஸ்.சிவா, சித்ரா குலோத்துங்கன், மாவட்ட பிரதி ரமணி, பொருளாளர் அபுபக்கர், திராவிட கழக மாநில இளைஞரணி செயலாளர் நாத்திக பொன்முடி, பகுத்தறிவாளர்களாக மாநில துணைத் தலைவர் முத்து கிருஷ்ணன், திராவிட கழக நகர தலைவர் செந்தில் குமார், மகளிர் பாசறை செயலாளர் கவிதா செந்தில் குமார்மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

முடிவில் பாவேந்தர் தமிழ் மன்ற செயலாளர் மு.க.ஜீவா நன்றி கூறினார்.


முன்னாள் சைதை சட்டமன்ற உறுப்பினர்
தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர்
வை.பெருமாள்
அவர்களின்
25ஆம் ஆண்டு நினைவேந்தல்



நாள் : 13.08.2026

பாட்டாளிகளின் பாதுகாவலன்...
“சாவு முனையிலும் தான் சார்ந்துள்ள இயக்கத்திற்காக உழைத்த உத்தமன்”
- தலைவர் கலைஞர்



1948 - 2001

இயக்கத்திற்காகத் தன் உயிரையும்
அர்ப்பணித்த உத்தமரின் நினைவைப் போற்றுவோம்!
நெஞ்சார்ந்த நினைவு வணக்கம்!

என்றும் உங்கள் வழியில்
பா.நவலடி ராஜா MCA., LLB..,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் – நாமக்கல் மேற்கு மாவட்டம்
வை.பெருமாள் குடும்பத்தினர்
வழக்கறிஞர் செல்லப்பா பாலசுப்ரமணியன் குடும்பத்தினர்
பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம்.